# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 145 · சனிக்கிழமை Saturday · 22.08.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


## விண்வெளித் துறையில் இந்தியா சாதனை; பிரதமர் மோடி பெருமிதம்



புதுடில்லி; விண்வெளி துறையில்இந்தியாஅதிக சாதனைகளை படைத்துள்ளது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். டில்லியில் உள்ள தனது அலுவலகத்தில் 20 விண்வெளி ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் மற்றும் நிறுவனர்களை பிரதமர் மோடி சந்தித்து பேசினார் அப்பொழுது விவசாயம், கால்நடை மேலாண்மை, பால்வளம், சுற்றுச்சூழல் உள்ளிட்ட துறைகளுக்கு விண்வெளித் தொழில்நுட்பம் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை ஆராயுமாறு, இந்தியாவின்விண்வெளிஸ்டார்ட் அப் நிறுவனங்களையும், தொழில்முனைவோரையும் பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது: இந்தியாவின் விண்வெளித் துறையில் அதாவது, சவால்கள் நிறைந்த ஒரு புதிய துறையில் துணிச்சலுடன் களமிறங்கியுள்ள இளம் தொழில்முனைவோர்களை சந்தித்தது மகிழ்ச்சியளித்தது. அவர்கள் சீர்திருத்த நடவடிக்கைகளை நம்பி, தங்கள் முயற்சிகளில் தளராத உறுதியுடன் செயல்பட்டுள்ளனர். இதன் விளைவாக, கடந்த சில ஆண்டுகளில் விண்வெளித் துறையில் இந்தியா பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளதோடு, குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் கண்டுள்ளது. இந்தத்ஸ்டார்ட்அப்நிறுவனங்கள் தங்கள் பணிகள் குறித்த பயனுள்ள விளக்கங்களை அளித்தன. விண்வெளித்துறையில் அரசு மேற்கொண்ட சீர்திருத்தங்களையும், அத்துறையில் அவர்கள் மேலும் வளர்ச்சியடைய அந்தச் சீர்திருத்தங்கள் எவ்வாறு ஊக்கமளித்தன என்பதையும்பாராட்டினர். எதிர்காலத்திற்கான இந்தியாவின் திறன்களை வளர்த்தெடுக்கும் இவர்களின் பயணத்தில், மத்திய அரசு தொடர்ந்து உறுதுணையாக நிற்கும் என்று நான் அவர்களுக்கு உறுதியளித்தேன். விண்வெளித் துறையில் புதுமையான மற்றும் வணிக ரீதியாக புதிய படைப்புகளை உலகிற்கு வழங்க இந்தியா வல்லமை பெற்றுள்ளது. இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.



## முதலமைச்சர் விஜய்யுடன் ரிசர்வ் வங்கி கவர்னர் சந்திப்பு

தமிழ்நாடு முதல்-அமைச்சர் ஜோசப் விஜய்யை இன்று சென்னை தலைமைச் செயலகத்தில், இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னர் சஞ்சய் மல்கோத்ரா சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், இந்திய ரிசர்வ் வங்கியின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டல இயக்குநர் உமா சங்கர், தலைமை பொது மேலாளர் யாராசி ஜெயக்குமார் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர். தமிழ்நாட்டின் தற்போதைய நிதி நிலைமை மற்றும் வங்கிச்சேவைகள் முக்கிய விவகாரங்கள் குறித்து முதலமை ச்சரும், ரிசர்வ் வங்கி ஆளுநரும் விரிவாக ஆலோசனை நடத்தினர். இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய இயக்குநர் குழுவின் 624-வது கூட்டம் சென்னையில் இன்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்க சென்னை வந்திருந்த ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்கோத்ரா, இக்கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாகவே தமிழக முதலமைச்சர் விஜய்யை நேரில் சந்தித்து மாநில வளர்ச்சி குறித்துப் பேசினார்.

## “திமுக எம்.எல்.ஏ.க்களுக்கு அரசு வழங்கும் கார் வேண்டாம்” சட்டபேரவையில் எதிர்கட்சி தலைவர் உதயநிதி அறிவிப்பு



சென்னை: "அனைத்து எம்எல்ஏக்களுக்கு புதிய வாகனம் வழங்குவதாக அரசு அறிவித்துள்ளது. ஏற்கனவே தமிழக அரசு கடும் நிதி நெருக்கடியில் இருப்பதாக முதல்வர் விஜய் கூறிவருவதால், திமுக தலைவர் ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் திமுகவை சேர்ந்த 59 எம்எல்ஏக்களும் அரசு வழங்கும் கார்களை பெற மாட்டோம்." என்று சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்தார்.

இது தொடர்பாக சட்டப்பேரவையில்இன்று பேசிய உதயநிதி ஸ்டாலின், "ஒரு முக்கியமான விஷயத்தை பதிவு செய்ய விரும்புகிறேன். அனைத்து எம்எல்ஏக்களுக்கு புதிய வாகனம் வழங்குவதாக இந்த அரசு முடிவு எடுத்து அறிவித்துள்ளது. ஏற்கெனவே தமிழக அரசு கடும் நிதி நெருக்கடியில் இருப்பதாக முதல்வர் விஜயே கூறி வருவதால், திமுக தலைவர் ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் திமுகவைச் சேர்ந்த 59 எம்எல்ஏக்களும் அரசு வழங்கும் காரை பெற மாட்டோம். அரசுக்கு ஏற்படும் தேவையற்ற செலவுகளை குறைக்கும் நோக்கில் எம்எல்ஏக்கள் தங்களது வேட்புமனுவில்குறிப்பிட்டுள்ள பொருளாதார சூழலை கவனத்தில் கொண்டு, பொருளாதாரத்தில் நலிவடைந்த உறுப்பினர்களுக்கு மட்டுமே இந்த அறிவிப்பின் கீழ் வாகனங்கள் வழங்க வேண்டும் என்பதை இந்த அரசின் கவனத்திற்குகொண்டுசெல்ல விரும்புகிறேன்." என்று கூறினார்.

அதற்கு பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, "கார் வைத்திருக்கும் தவெக சட்டமன்ற உறுப்பினர்கள் கார் கேட்டு விண்ணப்பிக்கப் போவதில்லை. எங்களின் நிலைப்பாடும் அது தான். அனைவரும்சமம்என்றமுறையில் தான் அனைவருக்கும் கார் அறிவிக்கப்பட்டுள்ளது. கார் என்பது ஆடம்பரம் இல்லை. மக்களை சந்திப்பதற்கான தேவை" என்று பதிலளித்தார்.

மேலும் அவர், "உதயநிதிக்கு இரண்டு, மூன்றுவீடுகள் இருக்கும் போது ஏன் அரசு பங்களா கேட்கிறார்" என்றும் வினவினார்.

## மீண்டும் ஜெட் வேகத்தில் ஏறிய தங்கம் விலை



காலை தங்கம் கிராமுக்கு110ரூபாய்உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,710-க்கும் சவரனுக்கு 880 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 17 ஆயிரத்து 680-க்கு விற்பனை செய்யப்பட்டது.

தங்கம்... என்றால் தற்போது நடுத்தர மக்களுக்கு எட்டாக்கனியாகவே மாறி வருகிறது. ஒவ்வொரு நாளும் புதிய விலையில் விற்பனை செய்யப்படுவதால் உச்சத்தை தொட்டு விற்பனையாகிறது. ஆடி மாதம் முடிந்து சுபமுகூர்த்த தினங்கள் நிறைந்த ஆவணி மாதம் பிறந்துள்ளதால், இனி வரும் நாட்களில் தங்கத்தின் தேவை அதிகரித்து விலை மேலும் உயரும் என கணிக்கப்பட்டது.

அதன்படி, நேற்று முன்தினம் காலை தங்கம் விலை சற்று குறைந்த நிலையில் மாலை திடீரென உயர்ந்தது. கிராமுக்கு ரூ.195 உயர்ந்து ரூ.14 ஆயிரத்து 400-க்கும்,சவரனுக்குரூ.1,560 உயர்ந்து ரூ.1 லட்சத்து 15 ஆயிரத்து 200-க்கும் விற்பனையானது. அதனை தொடர்ந்து நேற்று கிராமுக்கு 200 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,600-க்கும் சவரனுக்கு 1,600 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 16 ஆயிரத்து 800-க்கு விற்பனையானது.

இதனை தொடர்ந்து இன்று காலையும்தங்கம் விலை அதிரடியாக உயர்ந்தது. அதன்படி, கிராமுக்கு 110 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,710-க்கும் சவரனுக்கு 880 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 17 ஆயிரத்து 680-க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில், தற்போது தங்கம் விலை மீண்டும் ஜெட் வேகத்தில் உயர்ந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு 140 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,850-க்கும் சவரனுக்கு 1,120 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 18 ஆயிரத்து 800-க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை இன்று ஒரே நாளில் சவரனுக்கு ரூ.2000 உயர்ந்துள்ளதால் இல்லத்தரசிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தங்கத்தை போலவே வெள்ளி விலையும் மீண்டும் உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு 5 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் 270 ரூபாய்க்கும்பார்வெள்ளி 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.கடைசி ஐந்து நாள் தங்கம்விலை நிலவரம்

20-08-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,16,800

19-08-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,15,200

18-08-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,14,320

17-08-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,14,160

16-08-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,13,760

கடைசி ஐந்து நாள் வெள்ளிவிலைநிலவரம்

20-08-2026-ஒருகிராம் ரூ.260

19-08-2026- ஒரு கிராம் ரூ.250

18-08-2026-ஒருகிராம் ரூ.255

17-08-2026-ஒருகிராம் ரூ.255

16-08-2026-ஒருகிராம் ரூ.255


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# வங்கிக்கு களப்பயணம் சென்ற பள்ளி மாணவர்கள்

தேவகோட்டை: சிவகங்கை மாவட்டம்,தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள், தலைமை ஆசி-



ரியர் லெ.சொக்கலிங்கம் ஏற்பாட்டில் தாழையூரில் உள்ள பாரத ஸ்டேட் வங்கிக்கு களப்பயணம் மேற்கொண்டனர்.

நிகழ்ச்சிக்கு வங்கி கிளை மேலாளர் லோகநாதன் தலைமை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் முன்னிலை வகித்தார். வங்கி அலுவலர்கள் பாண்டியராஜன், கண்ணன், உதயசூரியன் ஆகியோர் மாணவர்களுக்கு வங்கியின் செயல்பாடுகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சேவைகள் குறித்து விளக்கினர்.

வங்கியில் உள்ள ஒவ்வொரு பிரிவிற்கும் மாணவர்களை நேரடியாக அழைத்துச் சென்று அதன் செயல்பாடுகள் குறித்து அலுவலர்கள் எடுத்துரைத்தனர்.பணம் செலுத்தும் படிவம், பணம் எடுக்கும் படிவம், காசோலை தொடர்பான படிவங்கள், நகைக்கடன் செலுத்துதல் உள்ளிட்ட பல்வேறு வங்கி நடைமுறைகள் குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும், ஏ.டி.எம். இயந்திரத்தை பாதுகாப்பாகப் பயன்படுத்துவது, ஏ.டி.எம். அட்டை தொடர்பான ரகசிய தகவல்களை பிறரிடம் தெரிவிக்கக்கூடாது, அட்டை தொலைந்தால் உடனடியாக வங்கியைத் தொடர்புகொள்ள வேண்டும் உள்ளிட்ட பாதுகாப்பு வழிமுறைகளும் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன.

ஏ.டி.எம்.அட்டை இல்லாமல் பணம் எடுப்பது எப்படி?

மாணவர்களின் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில், கார்ட்லெஸ் / யு.பி.ஐ.கேஷ்வித்ட்ராவல் வசதி உள்ள ஏ.டி.எம். மூலம் அட்டை இல்லாமல் பணம் எடுப்பது குறித்து நேரடி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

ஏ.டி.எம். திரையில் 'யு.பி.ஐ. கேஷ் வித்ட்ராவல்' அல்லது 'கார்ட்லெஸ் கேஷ் வித்ட்ராவல்' வசதியைத் தேர்வு செய்து, தேவையானதொகையை உள்ளிட வேண்டும். பின்னர் திரையில் தோன்றும் கியூ.ஆர். குறியீட்டை மொபைல் போனில் உள்ள யு.பி.ஐ. செயலி மூலம் ஸ்கேன் செய்து, பரிவர்த்தனை விவரங்களைச் சரிபார்த்து யு.பி.ஐ. பின் எண்ணை உள்ளிடுவதன் மூலம் பணம் எடுக்கும் முறையை மாணவர்களுக்கு விளக்கினர்.

வங்கி உதவியாளர் மேனகா, ஏ.டி.எம். செயல்பாடுகளை மாணவர்களுக்கு நேரடியாக செய்து காண்பித்தார். வெளியூரில் இருக்கும் குடும்பத்தினர் உள்ளிட்டோருக்கு பணம் அனுப்புதல் மற்றும் யு.பி.ஐ.மூலம் பணம் பெறுதல் தொடர்பான நடைமுறைகள் குறித்தும் மாணவர்கள் விளக்கம் பெற்றனர்.

வங்கி மேலாளர் மற்றும் அலுவலர்களிடம் மாணவர்கள் தங்களது சந்தேகங்களை ஆர்வத்துடன் கேட்டறிந்தனர். அவர்களின் வயதிற்கு ஏற்ற வகையில் வங்கி அலுவலர்கள் தெளிவான பதில்களை வழங்கினர்.

பள்ளிப் பருவத்திலேயே வங்கி சேவைகள், பணப் பரிவர்த்தனை மற்றும் டிஜிட்டல் பணப் பாதுகாப்பு குறித்து மாணவர்கள் நேரடியாக அறிந்து கொள்ளும் வகையில் இந்தக் களப்பயணம் அமைந்தது. பாடப்புத்தக அறிவுடன் வாழ்க்கைக்குத் தேவையான நடைமுறை அறிவையும் மாணவர்களுக்கு வழங்கிய இந்த முயற்சி பயனுள்ளதாக அமைந்தது.இதற்கான ஏற்பாடுகளை ஆசிரியைகள் ஆர்த்தி,சிவரஞ்சனி செய்து இருந்தனர்.



மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று 21.8.26 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தென்காசி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ஸ்டார் அகாடமி வளைகோல்பந்து பயிற்சியானது செயல்பட்டு வருகிறது, இதில் சுமார் 20க்கும் மேற்பட்ட மாணவ,மாணவிகள்வளைகோல்பந்துபயிற்சிபெற்றுவருகின்றனர்.இவ்வளைகோல்பந்து விளையாட்டிற்காக ரூ.1,80,000/ மதிப்புள்ள விளையாட்டு உபகரணங்களை மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள். மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.ச.ராஜேஷ் அவர்கள் உடன் உள்ளார்.



மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று 21.8.26 நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும்நாள்கூட்டத்தில்மாவட்டஆட்சியர்திரு.ரஞ்ஜீத்சிங்,விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.



# கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக நடைபெற்ற திருமணம்!

## இந்து முறைப்படி ஸ்ரீ முத்து மாரியம்மன் திருக்கோவிலில் மாலை மாற்றியும், தாலி கட்டியும் திருமணம் செய்து கொண்டனர்

கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டலஅலுவலகம்அமைந்துள்ளது. இக்கட்சியின் மாநில துணை தலைவராக நோட்டரி வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இருந்து வருகின்றார். இவரது தலைமையில், இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது. கோவை மாவட்டம் துடியலூர்பகுதியைசேர்ந்தவர் சக்தீஸ்வரன் என்ற 21,

வயது இளைஞருக்கும், திருப்பூர் மாவட்டம் திருமலையம்பாளையம் பகுதியை சேர்ந்த கௌசிகா என்ற 20 வயதான இளம்பெண்ணுக்கும் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக, இக்கட்சியின் மாநில துணைத் தலைவரும் நோட்டரி வழக்கறிஞருமான புஸ்பானந்தம் தலைமையில் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரும் வேறு வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதால்இருவரதுவீட்டிலும், இவர்களின் காதலுக்கு கடும்எதிர்ப்புதெரிவித்து வந்தனர் இந்த நிலையில் இருவரும் மனப்பூர்வமாக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் முன்னிலையில் இந்து முறைப்படி தாலி கட்டியும் மாலை மாற்றியும் திருமணம் செய்து கொண்டனர். தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கபட்டது. இந்த நிகழ்ச்சியில்,

கோவைஉக்கடம்அரசு போக்குவரத்து கழக ஓட்டுநர் ஈடன், நிர்மலா என்கிற ஜெபஸ்தியம்மாள், வழக்கறிஞர் குமாஸ்தாகள் திவ்யா, பால்ராஜ்,வேலான்டிபாளையம் ராஜ்குமார், முகிலன், ராஜ்குமார், முரளிதரன், ஆகாஷ், தீபக்குமார், பிரகாஷ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கோவை அரசூர் பகுதியில் உள்ள

# கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்லூரியில் உலக புகைப்பட தின விழா கொண்டாடப்பட்டது

கோவைஅரசூர்பகுதியில், கேபிஆர் கலை அறிவியல் மற்றும்




ஆராய்ச்சி கல்லூரியில் உலகபுகைப்படதினத்தை முன்னிட்டு புகைப்படக் கண்காட்சி மற்றும் பல்வேறு புகைப்படம்சார்ந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர் டாக்டர் பி.கீதா தலைமை தாங்கினார். நிகழ்ச்சியின் முக்கியசிறப்பம்சமாக நடைபெற்ற புகைப்படப் போட்டிக்கு சினிமாட்டோகிராபர் அஸ்வின் கே மற்றும் ஃபோட்டோகிராஃபர் மரியா ஜோச்ஃபின் ஆகியோர் நடுவர்களாகப் பங்கேற்று மாணவர்களின் படைப்புகளை மதிப்பீடு செய்தனர்.இந்நிகழ்ச்சியில் ஐநூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று தங்களது புகைப்படத் திறமைகளையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்தினர்

மாணவர்களின் திறமைகளை ஊக்குவிக்கும் வகையிலும் புகைப்படக் கலையின் மீதான ஆர்வத்தை வளர்க்கும் வகையிலும்இந்நிகழ்ச்சி அமைந்தது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பிக்ஸ் போட்டோகிராபி அண்ட் மீடியா டீம் சிறப்பாக மேற்கொண்டது. உலகபுகைப்படதினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்த விழா மாணவர்களின் படைப்பாற்றலையும் புகைப்படக் கலையின் மீதான ஆர்வத்தையும் வெளிப்படுத்தும் வகையில் சிறப்பாக அமைந்தது.

# முகத்தில் தேனீக்களுடன் 5 மணி நேரம் இருந்து நெல்லை வாலிபர் சாதனை

நெல்லை மாவட்டத்தை சேர்ந்த வாலிபர் இசக்கிமுத்து என்ற முருகன், தனது முகம் முழுவதும் ஆயிரக்கணக்கான தேனீக்களை 5 மணி நேரத்திற்கும் மேலாக மொய்க்கவிட்டு, புதிய சாதனை படைத்துள்ளார். அவரது இந்த துணிச்சலான முயற்சி, 'சீனா உலக சாதனை புத்தகம்' மற்றும் 'சோழன் உலக சாதனை புத்தகத்தில்' பதிவு செய்யப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் வள்ளியூரைச் சேர்ந்தவர் இசக்கிமுத்து என்ற முருகன் (வயது 27). இவர் விவசாயம் மற்றும் வேளாண்மை தொடர்பான படிப்பை முடித்தவர் ஆவார். படிப்பை முடித்த



பின், அவர் மாற்று பணிகளை தேடி செல்லாமல் முழுநேரமாகத் தேனீ வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வருகிறார். தற்பொழுது 18-க்கும் மேற்பட்டமதிப்புகூட்டப்பட்டதேன்பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வரும் இவர், பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் இலவசமாக தேனீ வளர்ப்பு பயிற்சிகளையும் வழங்கி வருகிறார்.

இந்தநிலையில்,தேனீக்கள்மனிதகுலத்திற்கும் விவசாயத்திற்கும்எவ்வளவுமுக்கியம்என்பதை உலகிற்கு உணர்த்த முருகன் முடிவு செய்தார். இதற்காக, அவர் ஒரு வினோதமான சாதனை முயற்சிக்கு திட்டமிட்டார். அதன்படி, நெல்லை மாரியா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஒரு பிரம்மாண்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு திரண்டிருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்களின் முன்னிலையில், முருகன் தனது முகம் மற்றும் தலைப்பகுதி முழுவதும் ஆயிரக்கணக்கான இந்தியதேனீக்களைமொய்க்கவிட்டார்.கண்கள், மூக்கு, வாய் என முகம் தெரியாத அளவுக்கு தேனீக்கள் அவரது முகத்தை முழுமையாக மூடி ஆக்கிரமித்தன.

தேனீக்கள் கடித்தால் கடுமையான வலி மற்றும் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்ற சூழலிலும், முருகன் எதற்கும் அஞ்சாமல், துளியும் பதற்றமின்றி, சிலையை போல அசையாமல்அமர்ந்திருந்தார்.தொடர்ந்து5மணி நேரம் 3 நிமிடங்கள் வரை தேனீக்களை தனது முகத்திலேயே அமரவைத்து, பார்ப்பவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் புதிய சாதனையை படைத்து அசத்தினார். இதற்கு முன்பு கேரளாவை சேர்ந்த ஒருவர் படைத்திருந்த சாதனையை இதன் மூலம் முருகன் முறியடித்துள்ளார்.

முருகனின் இந்த அசாத்திய சாதனை முயற்சியானது 'சீனா உலக சாதனைப் புத்தகம்' மற்றும் 'சோழன் உலக சாதனை புத்தகத்தில்' அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான சான்றிதழ்களும், விருதுகளும் அவருக்கு வழங்கப்பட்டன. இதுகுறித்து சாதனையாளர் முருகன் தெரிவித்ததாவது:-

"தேனீக்கள் மனிதர்களின் எதிரிகள் அல்ல, அவை நம் நண்பர்கள். தேனீ வளர்ப்பு என்பது விவசாயிகளுக்கு ஒரு சிறந்த சுயதொழில் வாய்ப்பு ஆகும். இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்த ஆபத்தான முயற்சியை நான் மேற்கொண்டேன். யாரும் தகுந்த பயிற்சியின்றி இதுபோன்ற ஆபத்தான முயற்சிகளில் ஈடுபட வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார். முகத்தில் ஆயிரக்கணக்கான தேனீக்களுடன் நெல்லை வாலிபர் முருகன் அமைதியாக அமர்ந்திருக்கும் இந்த மெய்சிலிர்க்க வைக்கும் வீடியோ காட்சிகள், தற்போது சமூக வலைத்தளங்களில் காட்டுத்தீ போல பரவி, உலக அளவில் வைரலாகி வருகிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சிவகங்கை மறவமங்கலம் வரை உள்ள கால்வாயை சீர்படுத்த வேண்டும்

## விவசாயிகள் கூட்டத்தில் கோரிக்கை

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர்ப.ஆகாஷ்தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கூட்டுறவு இணைப்பதிவாளர் மாவட்ட வனத்துறை அலுவலர் மாவட்ட விவசாய அலுவலர் மற்றும் முன்னோடி வங்கி மேலாளர் உள்பட அரசுத் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சுமார் 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் ஒய்யவந்தான் என்ற ஊரைச் சேர்ந்த விவசாயி விஸ்வநாதன் பேசும்போது... சிவகங்கை மாவட்டத்தில் அரசு பணத்தை செலவிட்டு கூட்டுறவு பட்டியில் இருந்து சிவகங்கை-சாதரசன்கோட்டை வழியாக மறவமங்கலம் பெரிய கண்மாய் வரை புதிய கால்வாய் அமைக்கப்பட்டது. முல்லைப் பெரியார் விரிவாக்க கால்வாய் திட்டத்தின் மூலம் சுமார் 35 கிலோமீட்டர் தூரத்திற்கு தண்ணீர் வரத்து கால்வாய் அமைக்கப்பட்டது. அதிமுக ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட இந்த கால்வாயை காலப்போக்கில் பொதுப்பணித்துறை சரியாக நிர்வாகிக்காததால் அவை இப்போது அழிந்துவருகிறது.எனவே இந்தக் கால்வாயை விவசாயிகளின் பயன்பாட்டிற்காக மீண்டும் சீரமைக்க வேண்டும் என்றார். மேலநெட்டூர் விவசாயி அய்யாசாமி பேசும்போது... சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஊரணி-



கள் தூர்வாரப்ப டாமல் உள்ளது. அவற்றை 100 நாட்கள் வேலை திட்டத்திலாவது சேர்த்து ஆழப்படுத்த வேண்டும். குமாரக் குறிச்சி அருகே காவிரி கூட்டு குடிநீரானது குழாய் உடைந்து மாதக் கணக்கில் வீணாகி வருவதை உடனடியாக சரி செய்ய வேண்டும் என்றார். இளையான்குடி பகுதி விவசாயி ஒருவர் பேசும்போது....சிவகங்கை மாவட்டத்தில் விவசாய காப்பீடு செய்ததை சென்ற அரசு கண்டு கொள்ளாமல் விவசாயிகளுக்கு எந்தவித இழப்பீடுகளையும் வழங்கவில்லை இதற்கு ஆவணம் செய்ய வேண்டும் என்றார். இதே போல் ஒவ்வொரு பகுதியிலும் பிரச்சனைகள் மற்றும் தேவைகள் குறித்து விவசாயிகளால் பேசப்பட்டு அதற்கு மாவட்ட அளவிலான அதிகாரிகள் தகுந்த பதில் கூறினார்கள்.

# கேட்டது 10 கிடைத்தது 3 மனித உயிர்களோடு விளையாடும் த.வெ.க அரசு நகர் மன்ற தலைவர் ஆதங்கம்

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகர மன்ற தலைவராக இருந்து வருபவர் மூப்பன் ஹபிபூர் ரகுமான்திமுகவை சார்ந்தவர்மக்களின் உயிரோடு விளையாடும் தமிழக அரசின் மெத்தனப் போக்



கும் ஆணவமும் அதிகாரப் பசியும் ஒட்டுமொத்த தமிழகத்தையும் கேள்விக்குறியாக்கும் நிலையில் அத்தியாவசிய அவசிய பணிகளுக்கு கூட நிதி ஒதுக்க மறுத்து வருவதாககடையநல்லூர் நகர மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான் செய்தியாளர்களிடம் ஆதங்கப்பட்டார் இது பற்றிய விவரமாவது தமிழக வெற்றிக்கழக அரசு பதவி ஏற்றவுடன் வாய்மொழி உத்தரவாக நகராட்சி ஊராட்சி திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்க கூடாது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக சொல்லப்பட்டது இதனால் நகராட்சி மற்றும் மாநகராட்சி ஊராட்சி பகுதிகளில் எந்த ஒரு பணியும் செய்ய முடியாத இழி நிலை தற்போது தமிழகத்தில் நடைபெற்று வருகிறது கடையநல்லூர் நகராட்சி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் திடீரென பரவும் டெங்கு காய்ச்சல் போன்ற மர்ம காய்ச்சலுக்கு இலங்கை அகதிகள் முகாமை சார்ந்த இரு பெண்கள் உட்பட பேட்டை ரகுமானியாபுரம் பத்தாவது தெரு பகுதி சேர்ந்த நர்சிங் கல்லூரி மாணவர் பரிதாபமாக உயிரிழந்த சோகம் நிலவி வருகி றது.கடையநல்லூர் நகராட்சி பகுதியில் மக்களின் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள கேட்டது 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்ததோ 3 லட்சம் பொதுமக்கள் தெரிவிக்கும் சிறு பிரச்சனைகளுக்கு கூட நிதி இல்லாததால் தீர்வு காண முடியாத அவல நிலை நிலவி வருகிறது அடிப்படை பிரச்சனைகளான குடிநீர் கழிவு நீரோடை பணிகளை செய்யக்கூட தற்போது பொது நிதி வழங்கப்படாததால் நகராட்சியே முடங்கி கிடக்கிறது முதலமைச்சர் அமைச்சர்களும் சென்னை கோட்டையில் இருந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவு போட்டு வருகின்றனர் ஆனால் அன்றாடம் மக்களை சந்திக்கும் எங்களுக்கு தான் பிரச்சனைகளின் வீரியம் தெரியும் தற்போதுநடைபெற்ற நகரமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட எந்த தீர்மானமும் பணி செய்ய ஒப்பந்த புள்ளி கூற முடியவில்லை தினமும் நகர் பகுதி பொதுமக்கள் நகராட்சியை ஒற்றுமையிட்டு வருவது வாடிக்கையாக இருக்கிறது கடையநல்லூரில் 15 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட மர்ம காய்ச்சலால் பலர் உயிரிழந்தும் பலர் மருத்துவமனைக்கு செலவு செய்த பண கஷ்டத்திலிருந்து இன்னும் மீள முடியாத நிலையில் இருந்து வருகின்றனர் அப்போதைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியால் இந்திய தலைவர டெல்லியில் இருந்து பூச்சியியல் வல்லுநர்கள் குழு கடையநல்லூரில் சுமார் இரண்டு மாத காலம் முகாம் இட்டு காய்ச்சலுக்கான அறிகுறி என்ன என்பதை கண்டறிந்தனர் தற்போது நகர் பகுதியில் பரவி வந்த மர்ம காய்ச்சலால் மூன்று உயிர்கள் பலியான நிலையிலும் மாவட்ட நிர்வாகம் இது குறித்து எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை தமிழக மக்களின் ஆதரவு பெற்று ஆட்சியில் இருக்கும் தமிழக வெற்றி கழகத்தின் ஆட்சியோ பொதுமக்களின் உயிரோடு விளையாடி வருகிறது உள்ளூர் மக்களுக்கு பதில் சொல்ல முடியாமல் மக்கள் பிரதிநிதிகள் திணறி வருகின்றனர் ஆண்டு தோறும் பருவ மழை தொடங்கும் முன்பு இதுபோன்று காய்ச்சல் பரவுவதை தடுக்கும் நோக்கில் கடந்த மாதம் 30 ஆம் தேதி நடைபெற்ற நகர் மன்ற சாதாரண கூட்டத்தில் அவசர அத்தியாவசிய தேவையாக டெங்கு தடுப்புப் பணிகள் கொசுப்புழு ஒழிப்பு பணிகள் முதிர் கொசு ஒழிப்பு பணிகளை தீவிரமாக மேற்கொள்ள பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான கிருமி நாசினிகள் கொசுப்புழு ஒழிப்பு மருந்துகள் மற்றும் தூய்மை பொருட்கள் வாங்குவதற்கு 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என தீர்மானம்கொண்டு வரப்பட்டது நகரமன்ற உறுப்பினர்களின் ஒட்டுமொத்த ஆதரவோடு தீர்மான நிறைவேறியும் நகராட்சி நிர்வாகம் பொது நிதியில் பணம் இருந்தும் வெறும் 3 லட்ச ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்ய முடியும் எனஅதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர் கடையநல்லூர் நகராட்சியில் 33 வார்டுகள் நூற்றுக்கணக்கான தெருக்கள் உள்ளது அனைத்து பகுதிகளும் தொற்றுநோய் பரவாமல் தடுப்பதற்கு மூன்று லட்சம் போதுமானதாக இல்லை என நகராட்சி உயர் அதிகாரிகளிடம் தெரிவித்தும் எந்த பலனும் இல்லை காய்ச்சல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிய நிதியை விடுவிக்க நகராட்சி நிர்வாகம் முன்வர வேண்டுமென நகர் மன்ற தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார் அடிப்படை அத்தியாவசிய பணிகளை கூட செய்ய இயலாத நிலையை இந்த அரசு ஏற்படுத்தி வருகிறது தமிழக முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நகர மன்ற தலைவர்கள் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள் மேயர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அதிகம் என உள்ளனர் என்பதால் அவர்களிடம் மக்களிடம்கெட்ட பெயரை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை வன்மையாக தெரிவித்துக் கொள்கிறேன் கடையநல்லூர் நகர் பகுதியில் ஏற்பட்டுள்ள காய்ச்சல் குறித்து தமிழக சட்டமன்றத்தில் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்த சட்டமன்ற உறுப்பினர் பாசத்திற்குரிய சகோதரர் தி மு ராஜேந்திரன் அவர்களுக்கு நகர மக்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.




திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் வட்டார வள மையம் குறுமையம் சார்பில் செவ்வாப்பேட்டைஅரசினர்ஆதிதிராவிடர்நலஆரம்பபள்ளியில்தொடக்கப்பள்ளி நடுநிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கான கலைத்திருவிழா போட்டிகள் நடைப்பெற்றது , விழாவிற்கு அரசினர் ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் வெங்கடேசன் தலைமை தாங்கினார் , வட்டாரவளமையமேற்பார்வையாளர்மீகாவேல்முன்னிலைவகித்தார்முன்னதாக செவ்வாப்பேட்டை அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியை உஷா அனைவரையும் வரவேற்றார் போட்டியின் ஒருங்கிணைப்பாளராக தண்ணீர்குளம் ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் வள்ளியம்மாள் பணியாற்றினார் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் ,ஆதிதிராவடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அம்பாசிடர் ( தூதுவர்,) சா.அருணன் சிறப்புரையாற்றினார் , அரண்வாயல் குப்பம் ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் வாசுதேவன் நன்றி தெரிவித்தார் , அரண்வாயல் , செவ்வாப்பேட்டை திருவூர், தொழுவூர் தண்ணீர்குளம் ஊராட்சிகளை சேர்ந்த தொடக்கப்பள்ளிகளை சேர்ந்த 100கும் மேற்பட்ட மாணவர்கள் போட்டியில் கலந்துக் கொண்டனர் ஆசிரியர்கள் ராஜலட்சுமி , அனந்தநாயாகி உள்ளிட்டோர் நடுவர்களாக பணியாற்றினர்

# “70 ஆண்டுகளுக்கு மேலான போற்றத்தக்க கலைப் பணி” சௌகார் ஜானகிக்கு முதல்வர் விஜய் புகழஞ்சலி

சென்னை: 'தனித்துவமான நடிப்பால் பல தலைமுறை ரசிகர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்தவர்' என பழம்பெரும் நடிகை சௌகார் ஜானகியின் மறைவுக்கு தமிழக முதல்வர் விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார்.





இது குறித்து அவர் வெளியிட்ட இரங்கல் குறிப்பில், "பழம்பெரும் திரைப்பட நடிகையும், தனது தனித்துவமான நடிப்பால் பல தலைமுறை ரசிகர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்தவருமான சௌகார் ஜானகி உடல்நலக்குறைவால் காலமானார் என்றசெய்தியை அறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

திரைத்துறையில் 70 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயணித்து, எண்ணற்ற கதாபாத்திரங்களுக்கு உயிரூட்டிய அவரது கலைப்பணி என்றும் போற்றத்தக்கது.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி போன்ற பல்வேறு மொழிப் படங்களில் நடித்து சாதனை படைத்துள்ளதோடு, பத்மஸ்ரீ விருது, கலைமாமணி விருது,நந்தி விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள சௌகார் ஜானகியின் மறைவு திரையுலகத்துக்கு பேரிழப்பாகும்.

சௌகார் ஜானகியை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், திரைத்துறையினருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆன்மா இறைவன் திருவடிகளில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

நடிகை சௌகார் ஜானகி மறைவு: பழம்பெரும் நடிகை சௌகார் ஜானகி காலமானார். அவருக்கு வயது 94. சௌகார்ஜானகிவயோதிகம் சார்ந்த உடல்நல பாதிப்பு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், இன்று பிற்பகல் 2 மணியளவில் அளவில் அவரது உயிர் பிரிந்தது.

ஆந்திர மாநிலம் ராஜமுந்திரியில் (1931) பிறந்தவர். தந்தை காகித மில் அதிபர். இவரது தொழில் காரணமாக பல்வேறு இடங்களில் வசிக்க நேர்ந்தது. சென்னையில் வசித்தபோது, சாரதா வித்யாலயாவில் படித்தார்.குழந்தைகளுக்கான வானொலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

வானொலி நாடகங்களிலும் பங்கேற்றார். வானொலி நாடகத்தைக் கேட்ட சினிமா தயாரிப்பாளர் பி.என்.ரெட்டி, 'குணசுந்தரி கதா' என்ற தெலுங்குபடத்தில்நடிக்க அழைத்தார். பெற்றோருக்கு இதில் விருப்பம் இல்லாததால், உறவுக்காரப் பையனுக்கு இவரை மணமுடித்து வைத்தனர்.

கணவருடன் விஜயவாடாவில் வசித்தார். அவர்வேறுநல்லவேலை தேடி, சென்னைக்கு வந்தார். சினிமா ஆசை துளிர்த்ததால் இவரும் சென்னை வந்து, தயாரிப்பாளர் பி.என்.ரெட்டியை சந்தித்தார். தன் தம்பி நாகிரெட்டியிடம் அவர் சிபாரிசு செய்தார்.

விஜயா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் என்.டி.ராமாராவ் நடித்த 'சௌகார்' என்ற தெலுங்கு படத்தில் 19-வது வயதில் கதாநாயகியாக அறிமுகமானார். தோற்றமும், நடிப்பும் இயல்பாக இருந்ததால் ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றார். இதனால் 'சௌகார் ஜானகி' ஆனார்.

மாடர்ன் தியேட்டர்ஸின் 'வளையாபதி' படத்தில் பாரதிதாசன் எழுதிய வசனத்தைப் பேசி நடித்தார். தொடர்ந்து ஜெமினி, ஏவிஎம் என முன்னணி நிறுவனங்களின் படங்களில் வாய்ப்புகள் குவிந்தன. அற்புத நடிப்பாற்றல், அபாரமாக வசனம் பேசும் திறன் கொண்ட இவர், 'பாக்கியலட்சுமி', 'படிக்காத மேதை', 'பாலும் பழமும்' என பீம்சிங்கின் பல வெற்றிப் படங்களில் நடித்தார்.

'பார் மகளே பார்', 'புதிய பறவை', 'நீர்க்குமிழி', 'பாமா விஜயம்', 'எதிர் நீச்சல்', 'இரு கோடுகள்', 'தில்லுமுல்லு' உள்ளிட்ட திரைப்படங்கள் இவருக்குப் பெயர் வாங்கிக் கொடுத்தன. சோகக் காட்சியில் நடிக்கும் வாய்ப்பே அதிகம் கிடைத்தாலும், காதல், வீரம், பாசம், கோபம், நகைச்சுவை என அனைத்து பாவங்களையும் சிறப்பாக வெளிப்படுத்தக்கூடியவர்.

தமிழில் எம்ஜிஆர், சிவாஜி, ஜெமினி, தெலுங்கில் என்.டி. ராமாராவ், நாகேஸ்வர ராவ் என முன்னணி நாயகர்களுடன் நடித்தார். தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, மலையாளம் உட்பட 385-க்கும் அதிகமான திரைப்படங்கள் நடித்துள்ளார்.

எந்த மொழியானாலும்அவரேடப்பிங்பேசுவார். கே.பாலசந்தரின் நாடகங்களிலும் நடித்தவர். 300-க்கும் மேற்பட்டமுறை மேடையேறியவர். காவியத்தலைவி, ரங்கராட்டினம் ஆகிய 2 படங்களை தயாரித்தார். தெலுங்கு திரைப்பட விருதுகள் கமிட்டி தலைவராகப் பணிபுரிந்தார். சமையல், தோட்டக் கலையில் வல்லவர்.

சென்னையில் 1965-ல் சத்ய சாய்பாபாவை சந்தித்த பிறகு,அவரை தன்குருவாகஏற்றுக்கொண்டார். அவரால்தன் வாழ்க்கையில்பல அற்புதங்கள் நடந்துள்ளதாக பல முறை குறிப்பிட்டுள்ளார். வாழ்நாள் சாதனையாளர் விருது, கலைமாமணி உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார். இவரது கலை சேவையை பாராட்டும் வகையில் 2022-க்கான பத்மஸ்ரீ விருது வழங்கியது மத்திய அரசு.

# ‘மின்சார வாரிய கடன், டெண்டர் முறைகேடு’ பேரவையில் செந்தில் பாலாஜி, நிர்மல் குமார் கடும் விவாதம்

சென்னை: தமிழக சட்டப்பேரவையில் இன்று மின் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, மின் துறையில் திமுக ஆட்சியில் முறைகேடுகள் நடந்ததாகவும், தற்போதைய தவெக அரசின் செயல்பாடுகள் பற்றியும் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கும், தற்போதைய அமைச்சர் நிர்மல் குமாருக்கும் இடையே காரசார விவாதம் நடைபெற்றது.





சட்டப்பேரவையில் மின் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் திமுக எம்எல்ஏ செந்தில் பாலாஜி பேசுகையில், "தவெக அரசில் 5 ஆண்டுகளில் மின் துறையில் கடனே வாங்க மாட்டீர்களா? கடன் அதிகரிக்காதா? புதிய திட்டங்களுக்கு அரசு நிதிகளைக் கொடுக்குமா? அல்லது முதல்வரிடம்நிதிகளைக் கேட்டு மின்வாரியத்தில் கடன் சுமை ஏறாமல் பார்த்துக்கொள்வீர்களா?.

திமுக ஆட்சியில் மின்வெட்டு இல்லாமல், விசாயிகளுக்கு 24 மணி நேரமும் மும்முனை இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. திமுக ஆட்சியில் 5 ஆண்டுகளில் மின் துறைக்கு 4 அமைச்சர்கள் மாற்றப்பட்டனர் என்று அமைச்சர் சொல்கிறார். தவெக அரசில் மாற்றமே இருக்காதா? என்பதைப் பார்க்கலாம்.

மேலும், அமைச்சரை மாற்றுவது முதல்வரின் விருப்பம். பேசும்போது கவனமாகப் பேசவேண்டும். மக்கள் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தவெக அரசில் இதுவரை மின் விநியோகம் செய்வதற்கான துறை ரீதியான கூட்டமே நடத்தவில்லை. லேசான மழைக்கு சென்னையில் மின்வெட்டு ஏற்படுகிறது. இதுதான் இன்றைய நிலைமை" என்று பேசினார்.

பின்னர், மின் துறை அமைச்சர் நிர்மல் குமார் பேசுகையில், "கடந்த திமுக ஆட்சியில் மின் துறையில் போடப்பட்ட டெண்டர்களை ஆராய்ந்ததில் 45 டெண்டர்களில் பெரிய அளவில் முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளன.இதுகுறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரனை நடைபெற்று வருகிறது.

மின்சாரத்துறை பொதுத்துறை நிறுவனம்;இதுதானாகஇயங்க முடியாது. அரசு ஓரளவு தான் நிதி கொடுக்கும். கடன் வாங்கித்தான் ஆக வேண்டும். ஆனால் கடனை எதற்குப் பயன்படுத்துகிறோம் என்பதை பொறுத்துதான், ஒவ்வொரு ரூபாயும் மக்கள் பயன்பாட்டுக்கு செல்கிறதா எனத் தெரியும்.

போக்குவரத்து துறையில் இருந்தபோது, செந்தில் பாலாஜி நிறைய ஆட்களை வேலைக்கு எடுத்திருக்கிறார். ஆனால், மின்சார த்துறைக்கு வந்த பிறகு அவர் ஆட்களை எடுக்கவில்லை. அவருக்கு இதைவிட பிற வேலைகள் இருந்திருக்கும் போல" என்று கூறினார்.

# தென்காசி மாவட்ட 108 அவசர ஊர்தி தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் 9 கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் வேலை நிறுத்த போராட்டம் நடந்த முடிவு

தென்காசி மாவட்ட 108 அவசர ஊர்தி தொமுச தொழிற்சங்கம் மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வு கூட்டம் குற்றாலத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மதுரை மண்டல தலைவர் ராஜகுமார், மதுரை மண்டல ஒருங்கிணைப்பாளர் அந்தோணி ராஜ் ஆகியோர் தலைமை தாங்கினர்.

கூட்டத்தில் 108 அவசர ஊர்தி தொழிலாளர்களின் ஊதியம், பணி சலுகைகள், பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்தில் தொழிலாளர் தீர்ப்பாய தீர்ப்பை உடனடியாக அமல்படுத்த வேண்டும்,8 மணிநேர வேலை மற்றும் ஊதிய பலன்களை பாதுகாக்க வேண்டும். 2023-ஆம் ஆண்டிற்க்கான ஊதிய உயர்வை 25% வழங்க வேண்டும். மருத்துவ காப்பீட்டை ரூ.5 லட்சம் ஆக உயர்த்த வேண்டும்.

மாதத்தின் முதல் வேலை நாளில் ஊதியம் வழங்க வேண்டும், வேலை இழந்த தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும், உள்ளிட்ட ஒன்பது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது



தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்த 9 கோரிக்கைகளையும் தமிழக அரசும்,108அவசர ஊர்தி நிர்வாகமும் உடனடியாகநிறைவேற்றவேண்டும். கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டால் மாவட்டம் தோறும் கண்டன ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்த போராட்டங்கள் போன்றவற்றை முன்னெடுப்பது என்று தெரிவித்துள்ளனர்.



தென்காசியில் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 82 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கி கொண்டாடினர். தென்காசி குத்துக்கல்வலசை மாவட்ட காங்கிரஸ் முகாம் அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் ஆலங்குளம் செல்வராஜ் ஆலோசனையின்படி நடந்த நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பு செயலாளர் கரடிகுளம் அண்ணாமலை, தென்காசி நகர்மன்ற கவுன்சிலர்கள் சுப்பிரமணியன், ரபீக், மாவட்ட பொது செயலாளர் விஜயன், இளைஞர் காங்கிரஸ் பிரேம்குமார், மாவட்ட பிரதிநிதி மாரியப்பன், வர்த்தக காங்கிரஸ் துணைத் தலைவர் ஜெயபிரகாஷ், கடையநல்லூர் நகரம் ஐயப்பன், ஆலங்குளம் மகளிர் அணி தலைவி சீதாலெட்சுமி, மாவட்ட அமைப்பு சாரா தலைவி சுரண்டை சேர்மக்கனி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன், வழக்கறிஞர் பிரிவு சீதாஉட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளைக் கேட்டறிந்தார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (21.08.2026) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும் போது தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டத்தின் இயல்பான ஆண்டு சராசரி மழையளவு 768 மிமீ ஆகும். நடப்பு ஆண்டில் 21.08.2026 முடிய 232.2 மி.மீ பெய்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது 55.28 அடியாகவும், 5.82 மி.கன அடிநீர் இருப்பும் உள்ளது. நடப்பாண்டில் வேளாண்மைவிரிவாக்க மையங்களில் விநியோகம் செய்வதற்காக நெல் விதைகள் 260 மெட்ரிக் டன், சிறுதானியயங்கள் 210 மெட்ரிக் டன், பயறுவகைகள் 10 மெட்ரிக் டன், எண்ணெய் வித்துக்கள் 66.7 மெட்ரிக் டன், இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இராசயன உரங்களான யூரியா 6592 மெட்ரிக்டன்,டி.ஏ.பி.1823 மெட்ரிக் டன்,பொட்டாஷ் 2545மெட்ரிக்டன் மற்றும் காம்ப்ளக்ஸ் 7891 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது. விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள வட்டார வேளாண்மைவிரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும், பயிர் சாகுபடிக்குத் தேவைப்படும் பூச்சிமருந்துகள் மற்றும் இரசாயன உரங்கள் ஆகியவை போதுமான அளவுக்கு தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பி.எம்.கிசான் பயனாளிகள் அனைவரும் தனித்துவ அடையாள எண் பெறுவது கட்டாயம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே, பி.எம்.கிசான் தவணை தொகை தொடர்ந்து கிடைத்திட இதுநாள் வரை தனித்துவ அடையாள எண் பெறாத பயனாளிகள் தங்கள் வட்டார வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு தனித்துவ அடையாள எண் பெற்றுக்கொள்ளலாம். மேலும், பி.எம்.கிசான் கணக்குடன் நிலம் தொடர்பான விபரங்களை இணைத்தல், ஆதார் விபரங்களை வங்கிக் கணக்குடன் இணைத்தல் மற்றும் தங்களது அடையாளத்தை இணைய வழியில் உறுதிபடுத்துதல் (eKYC) போன்ற விபரங்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம். வேளாண்மை பொறியியல்துறைமூலம்செயல்படுத்தப்படும்திட்டங்கள் குறித்து விளக்கமாக விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு அத்திட்டத்தின் பயன்களை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

தோட்டக்கலைத்துறையின் மூலம் செண்டுமல்லி பயிர் சாகுபடி முறைகள் மற்றும் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் கருத்து கண்காட்சி அமைக்கப்பட்டிருந்ததை பார்வையிட்டார். நேற்றைய தினம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகளை கேட்டறிந்து 76 கோரிக்கை மனுக்கள் பெற்று மேல் நடவடிக்கைக்காக உரிய அலுவலர்களிடம் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், வேளாண்மை இணை இயக்குநர் இரா.சிவக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சி.லோகநாதன், ஈரோடு வேளாண் விற்பனைக்குழு செயலாளர் கலைச்செல்வி, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் கந்தராஜா, கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர், தோட்டக்கலை துணை இயக்குநர், வேளாண் பொறியியல் துறையின் செயற்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறையின் உதவி செயற்பொறியாளர்கள் விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப்பிரதிநிதிகள் உட்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாண்மைத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி, நேற்று (21.08.2026) பார்வையிட்டார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# டெல்லி காவல்துறை துணை ஆணையர் அலுவலகம் முன்பு ராகுல் காந்தி தர்ணா போராட்டம்



புது டெல்லி: சி.ஜே.பி.யின் போராட்டத்தில் காவல்துறையினர் நடத்திய தாக்குதலால் காயமடைந்தவருடன் டெல்லி காவல்துறை துணை ஆணையர் அலுவலகம் முன்பு (ஆகஸ்ட் 21) ராகுல் காந்தி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

நீட் தேர்வில் முறைகேடு நடந்ததை எதிர்த்தும், மத்திய கல்வி அமைச்சராக இருந்த தர்மேந்திர பிரதான் பதவிவிலகவலியுறுத்தியும் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி சார்பில் டெல்லி ஜந்தர் மந்தரில் கடந்த ஜூலை மாதம் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் ஏராளமான இளைஞர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, தர்மேந்திர பிரதான் பதவி விலகுவதை வலியுறுத்தி கடந்த ஜூலை 20ஆம் தேதி கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் நாடாளுமன்றத்தை நோக்கி பேரணியாக சென்றனர். இந்நிலையில், பேரணியாக சென்றவர்கள் மீது டெல்லி காவல்துறையினர் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் ஏராளமானோர் காயமடைந்தனர். இதையடுத்து, ஜந்தர் மந்தரில் நடைபெற்ற கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் போராட்டத்தின் போது காயமடைந்த சாஹில் என்பவர் கடந்த ஆகஸ்ட் 14-ஆம் தேதி டெல்லி காவல் நிலையத்தில் தாக்குதலில் ஈடுபட்ட காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி எழுத்துப்பூர்வமாக புகாரளித்துள்ளார்.

ஆனால், இந்த புகாரின் விசாரணை அதிகாரியின் விவரத்தையோ அல்லது அதற்கான எண்ணையோ டெல்லி காவல்துறை வழங்கவில்லை என்று கூறப்படுகிறது. தொடர்ந்து ஆகஸ்ட் 17-ஆம் தேதியன்று சாஹில் மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி வாயிலாக இதுகுறித்த கேள்வியை டெல்லி காவல்நிலையத்திற்கு அனுப்பி உள்ளார்.

அப்போதும், விசாரணை அதிகாரி குறித்த விவரம் மற்றும் புகாரை பெற்றதற்கான ஒப்புதலும் டெல்லி காவல்துறை சார்பில் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இந்நிலையில், பாதிக்கப்பட்ட சாஹிலுடன், மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி டெல்லி நாடாளுமன்ற சாலையில் உள்ள காவல் நிலையத்திற்கு நேரில் சென்றார்.

அப்போது, ஜந்தர் மந்தர் போராட்டத்தின் போது காயமடைந்த சாஹிலின் புகாரை ஏற்றுக்கொண்டு, கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் நடத்திய போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தாக்கிய காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்என்று ராகுல் காந்தி கூறினார்.

மேலும், காவல்துறை அதற்கான முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய வேண்டும் என்றும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, டெல்லி நாடாளுமன்ற சாலையில் உள்ள காவல்துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்காததால், டெல்லி காவல்துறை துணை ஆணையர் அலுவகம் முன்பு, காயமடைந்த சாஹிலுடன், ராகுல் காந்தி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். இந்நிலையில், ராகுல் காந்தியுடன், மக்களவை உறுப்பினர் பிரியங்கா காந்தியும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# 'Despite our request...': India's titfortat move against Pakistan mission explained



The ministry of external affairs on Friday described India's tit-for-tat move as "proportionate action" after structures outside the Indian mission in Islamabad were removed.

The comments came after Indian authorities removed queue management barriers and other unauthorised structures outside the Pakistan High Commission in New Delhi in response to the action taken by Pakistani authorities.

Explaining the move, MEA spokesperson Randhir Jaiswal said, "we took what could be described as a proportionate action." "There were some temporary structures in the lane where the Pakistani High Commission is located here, and we removed them," Jaiswal said.


The action came two days after Pakistani authorities removed some barricades and parking poles on a road outside the Indian High Commission in Islamabad's high-security diplomatic enclave.

The Indian mission had formally protested against the removal, but Pakistani authorities went ahead with the action, saying it was part of a project to widen the road, HT had reported earlier citing people familiar with the matter.

Jaiswal said, "Despite our request to them not to do so, they went ahead with it."

Giving details of the incident, he added that the removed structures outside the Indian High Commission in Pakistan were meant to facilitate parking.

# ஏமன், சோமாலியா அருகே 22 இந்தியர்களுடன் 2 கப்பல்கள் கடத்தல்



புதுடெல்லி: ஏமன் மற்றும் சோமாலியா கடற்பகுதிகளில் நடந்த தனித்தனிச் சம்பவங்களில் 22 இந்தியர்களுடன் 2 கப்பல்களை கடற்கொள்ளையர்கள் கடத்திச்சென்றுள்ளனர்.

இது தொடர்பாக கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள தகவல்: எரித்ரியா நாட்டு கொடியுடன் கூடிய எம்.டி. சிபு 1 என்ற எண்ணெய் டேங்கர் கப்பல், ஆகஸ்ட் 20 அன்று ஏமன் கடற்கரையில் இருந்து சுமார் 30 கடல் மைல் தொலைவில் ஏடன் வளைகுடாவில் ஆயுதம் ஏந்திய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டது. 20 ஊழியர்கள் இருந்தனர். இவர்களில், 16 பேர் இந்தியர்கள். சிரியா, சூடான், ஈராக் நாடுகளைச் சேர்ந்த தலா ஒருவரும், எந்த நாட்டவர் என இதுவரைதெரியாத ஒருவரும் கப்பலில் இருந்தனர். எஸ்.கே.எஸ். கிருஷி மரைன் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் அளித்த ஆயுதம் ஏந்திய ஆறு கடற்கொள்ளையர்கள் கப்பலில் ஏறி, அதனை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர். சமீபத்திய தகவலின்படி, இந்திய கப்பல் ஊழியர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர்.

கேமரூன் நாட்டு கொடியுடன் கூடிய லுட்டுப் என்ற சரக்குக் கப்பல் கடந்த 17-ம் தேதி சோமாலியாவின் பண்ட்லேண்ட் கடற்கரைக்கு அருகே கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டது. இந்த கப்பலில் இருந்த 10 ஊழியர்களில் 6 பேர் இந்தியர்கள்.

இரண்டு சிறிய படகுகளில் வந்த 8 கடற்கொள்ளையர்கள் இந்தக் கப்பலில் ஏறி அதனை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இந்த சம்பவத்தில் இதுவரை யாருக்கும் காயம் ஏற்பட்டதாக தகவல் இல்லை. இவ்வாறு கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக பிடிஐ செய்தி வெளியிட்டுள்ளது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.